# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 351/2016/பே

ஆணை எண்: 23 /2018, நாள் : 13–02–2018

திரு ஆர். பாஸ்கரன்,
மேற்கு பாண்டி ரோடு,
வளவனூர்,
விழுப்புரம் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்

1.திரு சு. னு. முருகவேல்,
முன்னாள் தலைவர்,
வளவனூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

2.திருமதி தேன்மொழி,
முன்னாள் துணைத் தலைவர்,
வளவனூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம். -- எதிர் மனுதாரர்கள்

**ஆணை**

திரு ஆர். பாஸ்கரன், மேற்கு பாண்டி ரோடு, வளவனூர் அவர்களின் நாளிடப்படாத முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2195/2016/இ.2/நாள் 20.04.2016ன் படி இம்முறை மன்ற நடுவத்தில் 28.04.2016ல் பெறப்பட்டது. முறையீட்டு மனு 351/2016 ஆக எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டும், உரிய விசாரணைகள் மேற்கொண்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மீது சில புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 04.05.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரருக்கு தனது முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல் )விதிகள் 2015 ன் விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ 10/–க்கான நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடன் படிவம் 1 ஐ பூர்த்தி செய்து அனுப்பக் கோரி ஆணையிடப்பட்டது.

ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 20.12.2016ம் நாளிட்ட அழைப்பாணையில், மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது தரப்பிலான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 02.02.2017 அன்று நேரில் ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 23–12–2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்ட நேர்முக விசாரணைக்கான அழைப்பாணை “முகவரியில் மனுதாரர் இல்லை'' என்ற அஞ்சல் துறையினரது குறிப்புகளுடன் திரும்ப வரப்பெற்றுள்ளது.

வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 249/2016/அ.1/நாள் 27.01.2017ன் மூலம் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கை பரிசீலிக்கப்பட்டு சில கூடுதல் விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ 15.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலரின் நேரடி விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018 ல் ஆஜராக இம்முறைமன்ற நடுவ 17.01.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

24.01.2018 அன்று வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் நேரில் ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்கடங்கிய வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

“........திரு ஆர்.பாஸ்கரன் அவர்களின் மனு பற்றிய விவரம் தனக்கு தெரியும் எனவும், தான் கோட்டகுப்பம் பேரூராட்சியில் செயல் அலுவலராகவும், வளவனூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுவில் கோரப்பட்ட அறிக்கைகளை ஒரு வாரத்தில் அனுப்பி வைப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

வளவனூர் பேரூராட்சிசெயல் அலுவலர் மேற்படி நேரடி வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளவாறு தனது அறிக்கையினை ந.க.எண். 249/2016/அ.1/நாள் 29.01.2018ன் மூலம் கீழ்கண்டவாறு சமப்பித்துள்ளார்.

வளவனூர் பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம் 2013 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்ட நிதி ரூ 20.00 லட்சம் மற்றும் 2011–12 ஆம் ஆண்டுடே ஒருங்கிணைந்த நகர்ப்புற

வளர்ச்சி திட்ட நிதி ரூ 15.00 லட்சம் ஆக மொத்தம் ரூ 35.00 லட்சத்தில் கட்டப்பட்டதாகவும் மேற்படி பணிக்கு பேரூராட்சி மன்றத்தின் தீர்மான எண்.105/28.02.2008ல் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு கட்டி முடிக்கப்பட்ட சமுதாயக்கூடம் முதன்முதலில் 26.03.2013ல் ஏலம் விடப்பட்ட தாகவும் அந்த ஏலத்தில் ரூ 2,52,000/-க்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான காலத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டு மேற்படி ஏலத்திற்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 224/நாள் 29.04.2013ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் ஏலம் எடுத்தவர் தனது 31.03.2015ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி சமுதாயக் கூடம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதாக தெரிவித்து கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து 26.03.2015, 10.04.2015 மற்றும் 04.02.2016 ஆகிய தேதிகளில் மேற்படி சமுதாயக் கூடத்திற்கு ஏலம் கோரியதில் ஏலம் கோர எவரும் முன் வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சமுதாயக் கூடத்திற்கு ஏலம் எடுக்க எவரும் முன்வராததால் மேற்படி சமுதாயக் கூடம் பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் கூடுதல் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

பேரூராட்சி செயல் அலுவலர், வளவனூர் தனது கூடுதல் விளக்க அறிக்கையில் மேற்படி சமுதாயக் கூடம் கட்டப்பட்ட ஆண்டு மற்றும் ஒதுக்கீடு போன்ற விவரங்களையும் ஏலம் விடப்பட்டது மற்றும் சமுதாயக் கூடத்தின் தற்போதைய நிலை குறித்தும் தெரிவித்துள்ளார்

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்காததாலும், முறையீட்டு மனுவிற்கான நேரடி விளக்கத்தினை சமர்ப்பிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் முறையீட்டு மனுதாரர் இல்லை என அஞ்சல் துறை குறிப்புகள் மூலம் தெரியவந்துள்ளது. எனவே இம்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ**

**-//உத்திரவின்படி-அனுப்பப்படுகிறது.**

செயலாளர். 15/2/18

பெறுநர்
பேரூராட்சி செயல் அலுவலர்,
வளவனூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

15/2/18

நகல்
பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை - 108